# கருத்தமைதி மே – 2021

## பிரான்சிஸின் கற்புநெறி இறை அன்பில் நிறைவு பெறுவது

**உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள் (1கொரி 6:19)**

**பாடல்:** உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவே …..

**ஆராதனை:** உம்மை ஆராதிப்பதே என் அசை…..

**முன்னுரை**

**உன்னுள் உறையும் இறைவனிடம் பக்தி கொள்.**
**இறைவனின் உண்மையான கோயில் நீயே.**
**புறத்தே உள்ள கோயில்கள் எல்லாம்**
**உன் அகத்தே இருக்கும் கோயிலை நினைவூட்டுபவை என்கிறார்**

**சுவாமி விவேகானந்தர்.**

சிறந்த சிந்தனைகள் உள்ளத்தில் உதயமாகும்போது சிறந்த செயல்கள் பிறக்கின்றன. சிறந்த செயல்களைச் சமுதாயத்திற்கு ஆற்றும்போது அந்தச் சமுதாயம் மேன்மை அடைகிறது. சமுதாயத்தை மேன்மையடையச் செய்ய, வழிநடத்த

முதலில் அன்பு செய்ய வேண்டும், இரண்டாவது திட்டமிட வேண்டும். எவனொருவன் தான் எண்ணுவதைச் சொல்லி அதையே செய்கிறானோ, **அவனே மனிதன்.**

திட்டமிட்டு ஒரு செயலை ஆற்றும் போது என்ன நடக்கும்? என்று திருவள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்

**ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின்.**

"ஏற்ற காலத்தையும் இடத்தையும் அறிந்து ஒரு செயலைச் செய்தால் உலகமே வேண்டுமெனக் கருதினாலும், அதனைக் கைவசப்படுத்தலாம்" என்கிறார். ஆகவே யார் தன்னுடைய, சமூகத்தினுடைய வாழ்க்கைத் தரத்தை மேன்மையடையச் செய்ய, உயர்த்திக்கொள்ள, அறிவை வளப்படுத்திக் கொள்ள காலத்தைத் திட்டமிட்டு, அதனை நல்லமுறையில் செலவு செய்கிறானோ அவனே காலத்தின் அருளைப் பெற்று உயர்வடைகிறான்.

ஏற்ற காலத்தையும் இடத்தையும் சரியாக இறை ஞானத்தால் அறிந்த புனித பிரான்சிஸ் அனைவரின் வாழ்க்கையையும் உயர்த்த, பிறருக்கு உதவ, இறைவனுக்கு விருப்பமானவராக, இயேசுவைப் போல் வாழ விரும்பினார், திட்டமிட்டார், தொழுநோயாளிகளை முத்தமிட்டு, கட்டி அரவணைத்தார். தமியான் ஆலய காட்சிக்குப்

பிறகும் தொழுநோயாளியின் சந்திப்புக்குப் பிறகும் தூய ஆவியால் ஏவப்பட்டு பல காரியங்களைச் செய்தார்.

ஒன்றுமில்லாமையில் வாழ்க்கையை ஆரம்பித்தவர், அவமானத்தில் மகிழ்ச்சியடைந்தவர், துன்பத்தை விரும்பி ஏற்றவர், பைத்தியம் என்று பெயர் வாங்கியவர், உடுத்தியிருந்த உடையைத் தூக்கியெறிந்தவர், எத்தனை விமர்சனம் வந்தாலும் அவற்றை மகிழ்ச்சியாக்கியவர் புனித பிரான்சிஸ். இது அசிசி மக்களுக்கு பைத்தியக்காரத்தனமாகவும், புதிதாகவும், வித்தியாசமாகவும் தென்பட்டது. ஞானப் பைத்தியம் என்று அழைத்தார்கள். மன தைரியமும் தன்னம்பிக்கையும் இறைவனிடம் இருந்து அவருக்கு வந்ததால் புனித பிரான்சிஸ் எதையும் பிரச்சனையாக எடுத்துக்கொள்ளவில்லை. ஒரு சவாலாக எடுத்துக் கொண்டார்.

சொல்லில், சிந்தனையில் மட்டுமல்லாமல், செய்யும் செயலிலும் தெளிவோடு, தொலைநோக்குப் பார்வையோடு, திட்டமிடலோடு அனைத்தையும், அனைவரையும் அன்பு செய்தார் புனித பிரான்சிஸ்.

புனித பிரான்சிஸ் இயற்கையை அன்பு செய்தார், அதில் இறைவனைக் கண்டார்.
மனிதனை அன்பு செய்தார், இறைவனைக் கண்டார்.
உறவில் புனிதத்தைக் கண்டார், மேன்மையான செயல்களைச் செய்தார்.

இறைவனை வாழும் மனிதர்களிலும், இயற்கையிலும் கண்டதோடு இயற்கையில் பொறிக்கப்பட்டிருக்கும் கடவுளின் திட்டத்தையும் புரிந்து தெளிந்தார் **மாமனிதனான புனித பிரான்சிஸ்.**

**பாடல்: நான் நானாகவே வந்து நிற்கின்றேன்**

**பிரான்சிஸின் பற்றற்ற மனநிலை**

பற்றற்ற நிலை என்பது ஓர் நேர்மறையான மனநிலையை நமக்குக் கொடுப்பது. அதாவது விண்ணகத்தின் நன்மைகளை ஆர்வமாய்த் தேடுங்கள் என்பதே பிரான்சிஸியக் கற்பு நெறி.

**துறவு** என்பது துறந்து விடுவதிலும் தியாகம் செய்வதிலும் மட்டுமல்ல அது ஒரு தெய்வீக அன்பில் நிறைவு எய்தும் பாதையாக அமைய வேண்டும். துறவில் புனிதம் கண்ட புனித பிரான்சிஸ் தன் உடையையும் துறக்கத் தயார் நிலையில் இருந்தார். நிர்வாணமாகவும் தயார் நிலையில் இருந்தார். இது அவரது பற்றற்ற நிலை. எந்த நிலையானாலும் (இல்லறம், துறவறம்) புனிதமான அன்பினால், தெய்வீக அன்பினால் நிரப்பப்பட வேண்டும். அதுவே துறவு என்பதை தன் வாழ்வால் புரிய வைத்தார்.

**கற்பு என்பது தூய உள்ளம்.**

**கற்புநெறி நம் உள்ளார்ந்த ஏழ்மையின் வெளிப்பாடு.**

கற்பு வாழ்வு என்பது கன்னிமைத்தன்மை மூலமாக ஏற்படும் வெற்றிடம் கடவுளால் நிரப்பப்படுவது மட்டுமல்ல, அது புதுப்பிறப்புக்களை உருவாக்கும் விளைநிலமாகவும் மாறுகிறது. கிறிஸ்து என்னும் மணவாளனுடன் நடைபெறும் ஆன்மீகத் திருமணத்தின் மூலம் தாய்மைத்தன்மை பெறுகிறோம்.

உலக இன்பங்களிலும், தன்னிலும் நிறைவடையாமல் ஆற்றலற்ற வளமற்ற தன்மையை அடையாமல் திருச்சபைக்கு ஆன்மாக்களைப் பெற்றெடுக்கும் தாய்மையை அடைய வேண்டும். குருக்கள் இறைவார்த்தையைப் போதிப்பவர்கள் மட்டுமல்ல தன்னுடைய சகோதரத் துறவிகளையும் இதயத் தூய்மையுடன் பாவிகளை மீட்டெடுத்து ஆண்டவரிடம் சேர்க்கும் தாய்மை நிலையை அடையக் கூடியவர்கள் என அறிந்திருந்தார்.

சுருக்கமாக ஒவ்வொரு மனிதனிடத்தும் தனிப்பட்ட விதத்தில் உள்ள தூய்மையை கிறிஸ்துவோடு ஒன்றித்துள்ள ஆன்மீக ஒப்பந்தத்தோடு கற்பு இணைக்கிறது.

ஒரு கன்னியின் வெறுமையான இதயமும், வாழ்வும் வழிந்தோடும் அளவுக்கு இறைவனின் அன்பும், அருளும் அங்கு நிரப்பப்படும்.

நாம் உடல் உள்ளத் தூய்மையுடனும், அன்புடனும், மாசற்ற உண்மையான மனச்சான்றுடனும், நமது புனிதமான பணிகளின் மூலம் பிறருக்கு நன்மாதிரியாக விளங்கி கிறிஸ்துவை மீண்டும் பிறக்கச் செய்யும் பொழுது நாம் அவருக்குத் தாயாகின்றோம்.

**புனித பிரான்சிஸ் கற்பு என்று கூறுவது**

பிரான்சிஸின் காலத்தில் நடைமுறைப் பழக்கத்தில் இருந்தது போல் மற்ற பெண்கள்முன் வீரனாக, கம்பீரமாக இருந்தார். ஆனால் பெண்கள் மட்டில் எப்பொழுதும் மரியாதையுடனும், பெருந்தன்மையுடனும் நடந்து கொண்டார். **பிரான்சிஸின் கற்புநெறி என்பது அவரைப் பொறுத்தமட்டில் முழுமையான துறவும், இறைவனுக்குரிய சொத்தை தன்னுடைமையாகக் கொள்ளாதிருப்பதுமாகும்.**

**பாடல்:**

இறைவார்த்தைகளை வாழ்வாக்கி வாழ்ந்த தூய பிரான்சிஸ், ஒழுக்கமான வாழ்க்கையால் மட்டுமே ஒருவர் உண்மையான வலிமை பெற முடியும் என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். பிரான்சிஸை சந்தித்த அனைவருமே அவரது உடல், உள்ள, இதயத் தூய்மையை உணர்ந்து கொண்டனர். மனிதக் கண்ணோட்டத்தில் நாம் காணும்பொழுது கற்பு வார்த்தைப்பாடு கொடுப்பதன் மூலம் துறவி இறைவனால் நிரப்பப்பட்டு, இறைவனோடு இணைந்திருக்கிறாள்.

பிரான்சிஸ் தன்னை முழுமையாக இறைவனுக்குக் கையளித்தார்
அவரது ஆன்மா இறைவனுக்காக எப்பொழுதும் ஏங்கியது
அவரைக் காண தாகம் கொண்டது.

இருப்பினும் பிரான்சிஸின் கற்பு வாழ்வுக்குச் சோதனைகள், இன்னல்கள் வந்தன. ஆனால் இதயத் தூய்மையைப் பழுதடையச் செய்யவில்லை. பிரான்சிஸின் புகழ் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்ததோ, அந்த அளவு சாத்தானின் தொந்தரவும் அதிகரித்தது. கடவுளின் அருள் அதிகரிக்க அதிகரிக்க சாத்தானின் சோதனைகள் கடுமையாக இருந்தன.

**அவரின் சோதனைகள் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் கூறுவது**

(எ.கா) பெண்களின் உறவும், வேகமும், ஆற்றலும் பிரான்சிஸைத் திக்குமுக்காட வைத்தது. ஒருநாள் இணைந்து வாழ வற்புறுத்திய பெண்ணை நெருப்புக்குள் இணைந்து வாழலாம் வா என்று அழைத்து நெருப்புக்குள் புகுந்தார். புனித பிரான்சிஸை நெருப்பு ஒன்றும் செய்யாததைக் கண்ட பெண் மனம் மாறினாள்.

(எ.கா) உடல் சார்ந்த கற்புநெறியில் அவர் மிகவும் கண்டிப்பானவராகவும், விழிப்பாகவும் இருந்தார். இத்தகைய சோதனைகளால் தாக்குண்ட போது பனிக்கட்டியில் படுத்திருப்பது, முட்களின் மேல் படுப்பது, சாட்டைகளால் அடித்துக் கொள்வது ஆகியவற்றை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

(எ.கா) பனிக்கட்டிகளால் ஏழு உருவங்கள் செய்து நீ இவர்களுக்குப் பணிவிடை செய், அதில் வெற்றி பெற்றால் இறைவனுக்கு ஊழியம் செய் என்று கூறிய சாத்தானை வென்றார்.

சகோதரர்களுக்குக் கற்புக்கு பங்கம் விளைவிக்கும் சூழல்கள், அவர்களைச் சுற்றியிருக்கும் ஆபத்தான நேரங்கள், உலகிற்குச் சான்று பகரும் வாழ்விலிருந்து அவர்களைப் பிரித்து கற்புநெறியை விட்டுக்கொடுக்கும் நிலை ஏற்படுமோ என அஞ்சினார்.

ஆண்கள் பெண்களைப் பார்ப்பதினால் புனிதத் தன்மை அடைந்துவிட முடியாது. பெண்களோடு பேசுவதினால் பெரிய ஆதாயமும் கிடையாது. புனித வழியில் நடப்பவர்களுக்கு பெண்களின் உறவு ஒரு தடையே என்கிறார் புனித பிரான்சிஸ்.

தொடர்ந்து மக்களோடு தொடர்புடைய பணிகளில் பயணிக்கும் சகோதரர்களுக்குச் சில அபாயமான மறைவான சூழல்கள் அமையும் என்பதை அறிந்து எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சில அறிவுரை கூறினார்.

**புனித பிரான்சிஸ் சகோதரர்களுக்குக் கற்புநெறி பற்றி கூறும் அறிவுரை: (பிரிவு 12,13 பக்:70)**

1. சாதனைகள் புரிந்து கைமாறு பெறுதல், அலுவல்களில் ஈடுபடுதல், பிறருக்கு உதவுதல் என்று சாக்குப் போக்குச் சொல்லி நம் மனதையும், ஆன்மாவையும் இழந்துவிடாதபடி கவனமாய் இருப்போமாக.
2. சாத்தானின் தூண்டுதலினால் சகோதரர் யாராவது உடலுக்கெதிரான பாவத்தை கட்டிக் கொண்டால் அவருக்குத் துறவு ஆடை மறுக்கப்பட வேண்டும். அவர் சபையிலிருந்தும் அகற்றப்பட வேண்டும்.
3. சந்தேகத்தை எழுப்பக்கூடிய தொடர்போ, சந்திப்போ பெண்களோடு சகோதரர்கள் கொண்டிருக்க வேண்டாம். இடறல்கள் எழாத வண்ணம் பெண்களுக்கு ஆன்மீக ஆலோசகராக இருக்க வேண்டும்.
4. நாம் அனைவரும் நம்மையே கண்காணித்து நம் எல்லா உடல் உறுப்புக்களையும் தூய்மையாய்ப் பாதுகாப்போமாக. ஏனெனில் ஒரு பெண்ணை இச்சையோடு நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கனவே அப்பெண்ணோடு விபச்சாரம் செய்தாயிற்று என்று ஆண்டவர் கூறுகிறார்.(மத் 5:28)
5. நாம் தாழ்ச்சியும், எளிமையும், தூய்மையும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும் என்கிறார் பிரான்சிஸ்.
6. "ஏழ்மை வாழ்வு கற்பு வாழ்வுக்கு உதவியாகவும், அதுபோல கற்பு வாழ்வு ஏழ்மை வாழ்வைக் கடைபிடிக்க உதவியாகவும் இருந்தது" என்றார்.

**பாடல்:**

**கற்பும் சகோதர அன்பும்**

தூய்மையான அன்புடனும், கற்புடனும் வாழ குழும வாழ்வும், சகோதர அன்பும் இன்றியமையாதனவாய், உதவியாய் உள்ளன.

செலானோ தாமஸ் சகோதரர்கள் ஒருவர் ஒருவருக்கு உதவி செய்து வாழ்ந்ததை மிக நன்றாக எடுத்துரைக்கிறார். பிரான்சிஸ் உலகிலுள்ள எல்லாப் பொருட்களையும் துறந்துவிட்டதாலும் தன்னலமுடன் தன்னை அன்பு செய்யாததாலும் தன் அன்பு முழுவதையுமே எல்லாச் சகோதரர்கள் மேலும் பொழிந்தார். சகோதரர்களும் ஒருவர் ஒருவருடைய தேவையில் உடனுக்குடன் உதவி செய்தார்கள். ஆர்வமுடன் ஒன்று கூடி வருவதும் ஒன்று சேர்ந்து மகிழ்வதும் அவர்களது வழக்கமாய் இருந்தது.

தூய ஏழ்மையை ஏற்றுக் கொண்டவர்களாய் இருந்ததால் அவர்களிடம் எடுத்துச் செல்ல ஒன்றுமே இல்லை, எதையும் விரும்பவுமில்லை". இவர்களின் ஏழ்மையும், கீழ்ப்படிதலும் கற்பு வாழ்வைப் பின்பற்ற உதவியாக இருந்தது.

கற்பு என்பது ஒருபுறம் தூய்மையான கன்னிமையான இதயம், இறைவனுக்காக ஒதுக்கப்பட்ட சுதந்திரமான இதயம் யாருக்கும் எதையும் வரையறுத்துக் கொடுப்பதில்லை. எல்லோருக்கும், விசாலமாக, பரவலாக்கக் கூடிய அன்பு.

ஆனால் மறுபுறம் சகோதரருடன் இணைந்த குழும வாழ்வு. நமது அன்புறவை வளர்க்கக் கூடிய பொருத்தமான சூழ்நிலை, தங்களது துன்ப நேரங்களில் அவற்றை எப்படி மேற்கொள்வது என்ற விழிப்புணர்வுடன் கூடிய குழும வாழ்வு. தூய்மையான இதயம், ஏழ்மை இவை இரண்டும் எப்பொழுதும் சகோதரர்களைக் காப்பாற்றி வந்தன.

**பிரான்சிஸிய ஆன்ம நெறிப்படி கற்பு என்பது**

1. தூய்மையான இதயம் 2. தூய உடல் 3. எளிய மனம் (உலகப் பொருட்களிலிருந்து விடுதலை பெற்ற இதயம்) 4. தூய்மையான பார்வை

**1. தூய்மையான இதயம் என்பது கடவுளுக்கு மட்டுமே தன்னை அர்ப்பணிப்பது:**

**தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்,**
**ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர் (மத் 5:8)**

உலகப் பொருட்களை வெறுத்து விண்ணகக் காரியங்களைத் தேடி தூய மனத்துடனும், ஆன்மாவுடனும், இடைவிடாது வாழும் மெய்யான ஆண்டவராகிய கடவுளை ஆராதித்து, அவர்களைக் காண்பவர் உண்மையில் தூய உள்ளத்தோர் ஆவர். தூய உள்ளத்துடன் இருக்கும் ஒருவன் இறைவனுக்குரிய இடத்தை தன்னுள்ளத்தில் அளிப்பது மட்டுமின்றி, அவரது மகிமைக்காக எவையெவை உள்ளனவோ அவற்றையும் தன் உள்ளத்தில் ஏற்றுக்கொள்வான். அவன் உலக இன்பங்களில் நாட்டமுள்ளவனாக இருக்க மாட்டான். பொருட்கள் மட்டில் முறையற்ற பற்றுதலின்றி சுதந்திரமாக இருப்பான்.

**2. தூய்மையான உடல்**

தூய்மையான உடல் என்பது நமது உடல் அதன் குற்றங்கள் பாவங்களை வெறுக்க வேண்டும்.

**3. எளிய மனம்**

- ✠ ஒரு வெற்றுப் பாத்திரம் போன்றவர்கள். இவர்கள் எல்லாத் தடைகளையும் தகர்த்தவர்கள்.
- ✠ எல்லாவித உலகக் கவலைகளினின்று தங்களை விடுவித்துக் கொண்டவர்கள்.
- ✠ இறைவன் இல்லாத எதையும் தம் இதயத்தைவிட்டு எடுத்துவிட்டதால் இவர்கள் இதயம் இறைவன் வாழும் இல்லமாக அமையும். எ.கா.(யோவா.14:23)

**4. தூய்மையான பார்வை**

- ✠ சகோதரர் அனைவரும் எங்கு இருந்தாலும் எங்கு சென்றாலும் தூய்மையற்ற பார்வையையும் பெண்களோடு தொடர்பு கொள்வதையும் தவிர்க்க வேண்டும்.

- ✠ அவர்களுக்கு ஆலோசனை அளிப்பதோ, அவர்களோடு பயணம் செய்வதோ, ஒரே தட்டில் உண்பதோ கூடாது.
- ✠ குருக்கள் பெண்களுக்கு ஒப்புரவு அருள்சாதனம் வழங்கும் போதும் ஆன்மீக அறிவுரை அளிக்கும் போதும் அவர்களுடன் மரியாதையுடன் பேசுவார்களாக.

ஒருமுறை பிரான்சிஸ் கீழ்வரும் உவமையைக் கொண்டு பெண்கள் மட்டில் தனக்குள்ள மனநிலையை எடுத்துரைத்தார்.

ஒரு முறை ஒரு அரசர் இருவரை அடுத்தடுத்து அரசியிடம் தூது அனுப்பினார். ஒருவர் திரும்பி வந்து **"ஞானிகளின் கண்கள் ஒளி பெற்றவை"**(சஉ 2:4) என்று அரசி கூறியதை அப்படியே கூறினார். இரண்டாம் நபர் அரசி கூறியதைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, நான் மிக அழகான ஒரு பெண்ணைக் கண்டேன். அவளை மகிழ்விப்பவர் மிகப் பேறுபெற்றவர்'' என்றார். அரசர் கெட்ட ஊழியனே நீ உன் தூய்மையற்ற கண்களால் என் மனைவியைப் பார்த்திருக்கிறாய். உன் பார்வைக்கேற்ற தண்டனையைப் பெறுவாய் என்று சிறையிலடைத்தார். முதல் நபரை அழைத்து நீ அரசியைப்பற்றி என்ன நினைக்கின்றாய்? என்று கேட்டார். ''நான் நன்முறையில் அவர்களைப்பற்றி எண்ணுகிறேன். ஏனெனில் அவர்கள் அமைதியாக அனைத்தையும் கேட்டு ஞானத்தோடு பதிலளித்தார்கள்'' என்றான். அரசர், அவளிடம் அழகு இல்லையா? என்று கேட்டார். அதற்கு அவன் **"அது உங்களைச் சார்ந்தது. எனது பணி செய்தியைக் கூறுவது மட்டுமே"** என்றான். அரசன் அவனிடம் உனது கண்கள் தூய்மையானது. அதைவிட உனது உடலும் தூய்மையானவை. நீயே என் காப்பாளனாய் இருப்பாய் என்றார். இந்தத் தூய்மையான மனநிலையில் தான் எல்லாப் பெண்களையும் உற்று நோக்க வேண்டும்.

**பாடல்:**

**தாயின் அன்பு**

பிரான்சிஸின் வாழ்வில் அதிகமாக ஈர்க்கப்பட்ட முதல் பெண் **அவரது தாய்.** வரலாற்றைப் பார்க்கும்போது அவரது தந்தை பீட்டர் பெர்நார்து போலன்றி, இவரது தாய் ஒரு புனிதமானவர் என்பதே. பிரான்சிஸ் இவரை ஒரு தோழியாகவும், தனக்கு உதவுபவளாகவும் காண்கிறார். தாயோடு கொண்டிருந்த அன்புத் தோழமைதான் நிச்சயமாக மற்ற பெண்களின் தோழமை நட்புக்கு உரமிட்டிருக்கும். இதனால் ஒவ்வொரு தாயையும் 'நம்முடைய தாய்' என்று மரியாதையோடு மதிப்புக் கொடுத்து குறிப்பிடுவார்.

**(எ.கா.)** ஒரு நாள் ஒரு தாய் தன் இரு குழந்தைகளுடன் தர்மம் கேட்டு வந்திருந்தபோது பிரான்சிஸ் பொருளாளராக இருந்த பீட்டர் கத்தானியோவிடம்

“நம்முடைய தாய்க்குத் தர நம்மிடம் ஏதாவது உள்ளதா? கொடுங்கள் என்றார். அத்தாய் இங்குள்ள எல்லாச் சகோதரருக்கும் தாய் என்று கூறினார். இதே அன்பு, பாசத்தை எல்லாத் தாய்மாரிடமும் கொண்டிருந்தார்.

**(எ.கா.)** மருத்துவ உதவி கேட்டு வந்த ஒரு தாய்க்கு தன் அங்கியையே கொடுத்தார். அதை விற்று மருத்துவருக்குப் பணம் கொடுக்கும்படி கூறினார். இத்தகைய அன்பின் வெளிப்பாடாக தன்னுடைய இரண்டு ஒழுங்குகளிலும் தன் சகோதரரிடையே இத்தகைய அன்பே நிலவ வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

### கற்பும் நட்பும்

பிரான்சிஸ் ஒருமுறை தன் நண்பரிடம் இரு பெண்களின் முகத்தை மட்டும் என்னால் அடையாளம் காணமுடியும் என்றார். அவர்கள் ஜெகோபாவும், கிளாராவும் தான்.

இரண்டு மேற்கோள்கள் மூலம் பிரான்சிஸியக் கற்புநெறி வாழ்வை விளக்கலாம்.

### சிந்திப்போம்

என்னில் எல்லா ஆற்றலும் இருக்கின்றது.
தெய்வீகத்தன்மையும், திறமைகளும் இருக்கின்றன.
அதை வெளிப்படுத்துவதற்கும், வளர்த்துக் கொள்வதற்கும் வாய்ப்புகளும் உண்டு.
எனக்கு வருகின்ற சவால்களை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ளவும் முடியும்.
அதற்குத் தேவையான எளிமையும் தூய்மையும் உண்டு.
என்னால் ஒருவனை உயர்ந்த மனிதனாக, சமூகத்தில் சிறந்தவனாக மாற்றவும் முடியும். அதற்கான ஆசையும் உண்டு.

**“ஆனால் என்னில் ஏதோ ஒன்று பிறரை அரவணைக்க ஏற்றுக்கொள்ள மறுக்கிறது”**
**எது? … எது?.... எது?....**

**செபம்:** இறைவா! ஒவ்வொரு சகோதர சகோதரிக்கும் உகந்தது, பிடித்தது, விருப்பமானது என ஒன்று கட்டாயம் இருக்கும். அதையும் கடந்து உமக்கு உகந்தவராக வாழ விரும்பியவர் பிரான்சிஸ். உமக்கு உகந்த, தூய உயிருள்ள பலியாக எங்களைப் படைக்க தூயதோர் உள்ளத்தை எங்களுக்குள்ளே படைத்தருளும். உறுதி தரும் ஆவியை எங்களுக்குள்ளே உருவாக்கியருளும். உமக்கு உகந்தவர்களாக வாழ, சகமனிதனை எங்களைப்போல் நேசிக்க, உதவி செய்ய வரம் தாரும் இறைவா!

**நம்மையே இறைவனுக்குக் காணிக்கையாக்குவோம்.**

*Prepared by*

SR. ANNAL RITA RANI (979)